குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.38/2022

ம.சா. 2

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12–ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | தொழில் | |
| தந்தை பெயர் | துரைசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.24 மணி,

Complainant Murugesan present. Advocate Mr.Bavanirajan present for Complainant. Accused Rajkumar Present. Advocate Mr.Anbarasan present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு எழுத படிக்க தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்தது. அந்த அழைப்பானையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண பத்திரிக்கையை தயார் செய்த போது நானும் புகார்தாரரும் உடன் இருந்தோம். ஆஜர் எதிரி நடத்தி வந்த கடையை எந்த ஆண்டு காலி செய்தார் என்ற விபரம் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை.

2) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றாலும் புகார்தாரர் கேட்டுக் கொண்டதற்காக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் அமரகுந்தி கிராமம், ஓமலூர் தாலுக்காவில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் இரும்பாலை கொல்லப்பட்டியில் இருக்கிறார். புகார்தாரர் தாரமங்கலத்தில் குடியிருக்கிறார்.

3) இவ்வழக்கு காசோலையை நான் பார்த்துள்ளேன். அது ஆஜர் எதிரியுடைய தனிப்பட்ட காசோலை. ஆஜர் எதிரி எந்த தேதியில் புகார்தாரரிடம் பணம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது, புகார்தாரர் சொல்லி தான் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கு காசோலையில் பெயரும், தொகையின் விபரமும் வெவ்வேறாக இருக்கிறது என்றால் சரிதான், எழுதும் போது ஒரேமாதிரியாக இருக்காது. இவ்வழக்கு காசோலையில் உள்ள தேதிக்கு கீழ் உள்ள கையொப்பமும், தொகைக்கு கீழ்

உள்ள கையொப்பமும் வித்தியாசமாக இருக்கிறது என்றால் அவ்வாறு எனக்கு தெரியவில்லை. இரண்டு கையெழுத்தும் வேறு மாதிரியாக இருக்கிறது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) இவ்வழக்கு காசோலையில் 01.11.2011 என்று எழுதப்பட்ட தேதியை பின்னிட்டு 15.02.2022 என்று திருத்தம் செய்து கையொப்பம் இட்டு ஆஜர் எதிரி கொடுத்தார். மேற்படி 15.02.2022 தேதியை 15.03.2022 என்று கூட திருத்தியிருக்க முடியும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி காசோலையை கொடுத்துவிட்டு அடுத்த மாதம் வங்கியில் செலுத்த சொல்லி சொன்னதாக எனது சாட்சியத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆஜர் எதிரி காசோலை கொடுத்த விபரம் எனக்கு தெரியும்.

5) புகார்தாரர் முருகேசன் என்னுடைய நண்பர் ஆவார். எனது நண்பர் கேட்டுக் கொண்டதற்காக ஆஜர் எதிரியிடம் இருந்த காசோலையை புகார்தாரர் எடுத்து வந்து நாங்கள் இருவரும் கூட்டு சேர்ந்து வழக்கு காசோலையின் தொகை மற்றும் தேதியை பூர்த்தி செய்து ஆஜர் எதிரியிடம் இருந்து துர்நோக்கம் அடைய வேண்டி இந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) ஆஜர் எதிரியிடம் இருந்து நான் சீட்டு போட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை. நான் எனது நண்பருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி இந்த வழக்கு காசோலையில் எந்தவித தேதி திருத்தமும் செய்யவில்லை என்றாலும் தேதி திருத்தம் செய்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, என் முன்னிலையில் தேதி திருத்தம் செய்தார்.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 03.43 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.